1981 மே 14]

(ஆ) ஆம் எனில் அம்மருத்துவமனையில் போதிய அளவிற்கு அறுவை சிகிச்சை அரங்கு ஏற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) நோயாளிகள் பாதிக்கப்பட்டதாக அரசுக்கு தகவல் ஏதும் இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரி.

*வினா எண் 1037—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரியில் இவ்வாண்டு (1980) எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்?

(ஆ) வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் எத்தனைப் பேர்?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக்கல்லூரியில் இவ்வாண்டு (1980–81) பி.எஸ்.எம்.எஸ். பட்டப்படிப்புக்கு 75 பேர்களும், எம்.டி. சித்தா பட்ட மேற்படிப்புக்கு 13 பேர்களும், இந்தியமுறை மருந்தாளுநர்கள் பட்டப்படிப்பிற்காக 8 பேர்களும், ஆக மொத்தம் 96 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

(ஆ) கேரள மாநிலத்தைச் சேர்ந்த 2 மாணவர்கள் பி.எஸ்.எம்.எஸ். சித்தா பட்டப்படிப்பிலும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஒரு மாணவர் எம்.டி. (சித்தா) படிப்பிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

(முற்பகல் 9–20)

**திரு. மு. அப்பாதுரை:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே பாளையங்கோட்டையிலே உள்ள இந்திய மருத்துவக்கல்லூரியில் 306 பேர் சேர்க்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களிலே தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, பட்டப்படிப்புக்கு 75 பேர்களும் மேற்பட்டப்படிப்பிற்காக 13 பேர்களும் சேர்க்கப்பட்டிருப்பதாக நான் பதில் கொடுத்திருக்கிறேன். 75 பேரிலே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை 14. அங்கே அவர்களுக்கு என்று 18 சதவீத

ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி 13 பேர் எடுத்துக் கொள்ளபடவேண்டும் என்று இருந்தாலும் ஒரு நபர் ஜாஸ்தியாக எடுத்து ஆக 14 பேர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

### எழும்பூரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனை.

*வினா எண் 1038— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எழும்பூரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையில் ஏற்படும் நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு மேற்படி மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையை விரிவுபடுத்தி, தற்போதுள்ள 250 படுக்கை வசதிகளை 450 ஆக உயர்த்த ஒரு வரைவுத் திட்டம் மருத்துவக் கல்லூரி இயக்குநரால் பொதுப்பணி தலைமைப்பொறியாளருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே உள்ள அத்தனை மக்களும் இந்த எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனைக்குத்தான் குழந்தைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவே ஆங்காங்கே உள்ள மருத்துவமனைகளிலே குழந்தைகளுக்கு வைத்தியம் பார்க்கின்ற அளவிலே ஏற்பாடு செய்து ஒட்டுமொத்தமாக எல்லோருமே எழும்பூருக்கு வருவதைக் தடுத்து நிறுத்த அரசு ஏற்பாடு செய்யுமா? மேலும் பக்கத்திலே உள்ள காலியிடங்களையும் விலைக்கு ாங்கி மருத்துவமனையை விரிவுபடுத்துவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மூலக்கேள்வி எழும்பூரிலே இருக்கக்கூடிய குழந்தைகள் நல மருத்துவமனை விரிவுபடுத்தப்படுமா என்பது. அந்தக் கேள்விக்கு நான் பதிலளித்திருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் இடங்களிலே அப்படிச் செய்யப்படுமா என்று கேட்கிறார்கள். ஸ்டான்லி மருத்துமனையிலே 240 படுக்கைகள் கொண்ட பெரிய அளவிலே ஒரு குழந்தைகளுக்கான பிரிவை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை இந்த ஆண்டு தீட்டி இருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, எழும்பூர் மருத்துவமனையிலே போதிய நவீனக் கருவிகள் இல்லாததன் காரணத்தால் குழந்தைகளுக்கு வைத்தியம் பார்ப்பதிலே சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே நவீன கருவிகளை வாங்கி, கூடுதலாக டாக்டர்களை நியமிப்பதற்கும் அரசு ஆவண செய்யுமா? மேலும் இந்த மருத்துவமனை தென் சென்னையிலே தான் இருக்கின்றது. வட சென்னையிலேயும் குழந்தைகள் நல மருத்துவமனையை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?